**ஜூலை – 03**

# TNPSC துளிகள்

- 7.2 முதல் 7.5 வரையிலான ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் பெரும் சேதம் மற்றும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்ட வெனிசுலாவில் அமிஸ்டாட் நடவடிக்கை எனும் திட்டத்தின் கீழ் செயல்படும் இந்திய ராணுவத்தின் கள மருத்துவமனை முழுமையாகச் செயல்படத் தொடங்கி, 24×7 இலவச மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய ஊரக வளர்ச்சி மாநாடு ஜூன் 28-29 ஆகிய தேதிகளில் புது தில்லியில் நடைபெற்றதுடன் இதில் ஊரக வளர்ச்சிக்கான முக்கியத் திட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் முழுமையான ஊரக வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப் பட்டது.
- எண்ம வானிலை முன்னறிவிப்பு (NWP), செயற்கைக்கோள் தரவு ஒருங்கிணைப்பு மற்றும் உலகளாவிய வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியத்தை மேம்படுத்தச் செய்வதில் சிறந்தப் பங்களிப்பை வழங்கியதற்காக, பிரெஞ்சு வானிலை ஆய்வாளர் டாக்டர் புளோரன்ஸ் ராபியர் உலக வானிலை அமைப்பின் (WMO) 2026 ஆம் ஆண்டிற்கான சர்வதேச வானிலை அமைப்பு (IMO) பரிசைப் பெற்றார்.
- சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டுக் கூட்டமைப்பின் (ISSF) 2026 ஆம் ஆண்டிற்கான ஜூனியர் உலக சாம்பியன்ஷிப்பில், 7 தங்கம், 8 வெள்ளி மற்றும் 10 வெண்கலம் என மொத்தம் 25 பதக்கங்களை வென்று இந்தியா பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- தேசிய மின் பாதுகாப்பு வாரம் 2026 ஆனது தமிழ்நாட்டில் மின்சாரத் துறையால் ஜூன் 26 முதல் ஜூலை 2 வரை அனுசரிக்கப்படுகிறது.
  - "இன்றைய விழிப்புணர்வு, நாளைய பாதுகாப்பு" என்ற கருத்துருவின் கீழ் இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரம் நடத்தப்படுகிறது.


# தேசியச் செய்திகள்

## 5 லட்சம் உடல் உறுப்பு தானம் - நோட்டோ இணையதளம்

- தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் (NOTTO) ஆதார் அடிப்படையிலான இணையதள உறுதிமொழி அமைப்பின் ஆதரவுடன், இந்தியாவில் 5 லட்சம் பேர் உடல் உறுப்பு தானம் செய்வதற்கான உறுதிமொழியை ஏற்றுள்ளனர்.
- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது உயிருள்ள அல்லது இறந்த கொடையாளர்களிடமிருந்து சிறுநீரகம், கல்லீரல், இதயம், நுரையீரல், கணையம் மற்றும் குடல் போன்ற உறுப்புகளை மாற்றுவதை உள்ளடக்கியதாகும்.
- மொத்த உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளில் அமெரிக்கா (US) மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா உலக அளவில் 3வது இடத்தில் உள்ளது என்றாலும் இறந்த கொடையாளர்களின் பற்றாக்குறையை இன்னும் எதிர் கொள்கிறது.
- மூளைச் சாவு அடைவதை சட்டப்பூர்வமான மரணமாக அங்கீகரிக்கும் மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று சட்டம் (THOTA), 1994)-இன் (2011 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது) கீழ் இந்த அமைப்பு செயல்படுகிறது.
- இதன் நிறுவனக் கட்டமைப்பானது NOTTO (தேசிய நிலை), ROTTO (மண்டல உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு) மற்றும் SOTTO (மாநில உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.




## தொலைத்தொடர்பு விதிகள் 2026




- தொலைத்தொடர்புச் சட்டம், 2023-இன் முக்கிய விதிகளைச் செயல்படுத்துவதற்காக தொலைத்தொடர்பு (முக்கிய தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்கான அங்கீகாரம்) விதிகள், 2026 நடைமுறைக்கு வந்துள்ளது.
- இந்த விதிகள் இந்திய தந்திச் சட்டம், 1885-இன் கீழ் இருந்த உரிம முறைக்கு மாற்றாக, தொலைத்தொடர்பு சேவைகளுக்கான ஒருங்கிணைந்த அங்கீகாரக் கட்டமைப்பைக் கொண்டுவருகிறது. இனி அதிகபட்ச அங்கீகார காலம் 20 ஆண்டுகள் ஆகும்.
- அணுகல் அலைக்கற்றை, பிரத்யேக பொது அல்லாத வலையமைப்புகள், கம்பிவடத் தரை இறங்கும் நிலையங்கள் மற்றும் முக்கிய தொலைத்தொடர்பு வலை அமைப்புகளுக்கான சட்டப்பூர்வ வரையறைகளை இவை அறிமுகப் படுத்துகின்றன.
- மோசடிகளைக் கண்டறிவதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பெரிய தரவு பகுப்பாய்வு ஆகியவற்றை இந்த விதிகள் கட்டாயமாக்குவதோடு தரவு உள்ளூர்மயமாக்கலைச் செயல்படுத்துகின்றன. செயற்கைக்கோள் வலை அமைப்புகள் மற்றும் மிகச்சிறிய துளை கொண்ட முனையச் (VSAT) சேவைகளை அங்கீகார அமைப்பின் கீழ் கொண்டு வருகின்றன.

- சரி செய்யப்பட்ட மொத்த வருவாய் (AGR) கணக்கீடுகளிலிருந்து தொலைத்தொடர்பு அல்லாத வருமானத்தையும் இவை விலக்குவதுடன் டிஜிட்டல் செயலாக்கத்திற்காக தொலைத்தொடர்பு இ-சேவை வலைதளத்தினையும் அறிமுகப் படுத்துகின்றன.

## உணவுப் பாதுகாப்பு விதிகள் புதுப்பிப்பு 2026

- எளிதாக தொழில் செய்வதை மேம்படுத்துவதற்காக உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் (உணவு வணிகங்களின் உரிமம் மற்றும் பதிவு) விதிமுறைகள், 2011-ஐ சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (MoHFW) திருத்தியுள்ளது.
- உணவுத் தொழில் நடத்துபவர்களுக்கான விதிமுறைகளை எளிதாக்கும் வகையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் சட்டம், 2006 இன் கீழ் இந்தத் திருத்தம் வெளியிடப் பட்டுள்ளது.
- 'முதலில் வந்தது முதலில் செல்லும்' (FIFO) மற்றும் 'முதலில் காலாவதியாவது முதலில் செல்லும்' (FEFO) ஆகிய இருப்பு சுழற்சி மற்றும் பதிவுப் பராமரிப்புத் தேவைகள் இப்போது உணவுத் தயாரிப்பு வணிகங்களுக்கு மட்டுமே கட்டாயமாக்கப்பட்டுள்ளன.
- சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் அது சார்ந்த தொழில் நடத்துபவர்கள் போன்ற தயாரிப்பு அல்லாத உணவு வணிகங்களுக்கு இந்தத் தேவைகளில் இருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சீர்திருத்தம், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர உணவு நிறுவனங்களுக்கான இணக்கச் சுமையைக் குறைக்கிற அதே வேளையில் உற்பத்தியாளர்களுக்கான முக்கிய உணவுப் பாதுகாப்பு மற்றும் கண்டறியும் தரநிலைகளைப் பராமரிக்கிறது.




# சர்வதேசச் செய்திகள்

## அமைதி மற்றும் வளமைக்கான ஜெஜு மன்றம் 2026

- 2026 ஆம் ஆண்டிற்கான அமைதி மற்றும் வளமைக்கான ஜெஜு மன்றமானது தென் கொரியாவின் ஜெஜுவில் நடைபெற்றது.
- இது ஆசியாவின் அமைதி, வளமை மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான முன்னணி சர்வதேச உரையாடல் தளங்களில் ஒன்றாகும்.
- இந்த மன்றம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கொள்கை வகுப்பாளர்கள், தூதர்கள்,

கல்வியாளர்கள் மற்றும் வணிகத் தலைவர்களை ஒன்றிணைக்கிறது.

- புதுப்பிக்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கையின் மூலம் உலகளாவிய பிளவுகளை எதிர்கொள்வதில் 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துருவில் கவனம் செலுத்தியது.
- பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்களைப் பற்றி விவாதிக்கவும், சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இந்த மன்றம் ஒரு தளத்தை வழங்குகிறது.




## அமெரிக்காவின் தேச பக்த கடவுச்சீட்டு 2026





- அமெரிக்க சுதந்திரத்தின் 250 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், அமெரிக்கா (U.S.) வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான "தேசபக்த கடவுச்சீட்டை" (Patriot Passport) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த கடவுச்சீட்டானது 2026 ஆம் ஆண்டு ஜூலை 6 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்க கடவுச்சீட்டு முகமைகள் மூலம் குறைந்த எண்ணிக்கையில் கிடைக்கும்.
- இதில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் படம் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம்

அமெரிக்க கடவுச்சீட்டில் இடம் பெறும் முதல் பதவியிலிருக்கும் அமெரிக்க அதிபர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

- சுதந்திரப் பிரகடனம் கையெழுத்திடப்பட்ட (1776) ஓவியம் மற்றும் "யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா 250" என்ற வார்த்தைகளும் இதன் வடிவமைப்பில் அடங்கும்.
- அமெரிக்காவின் ஒரு டாலர் நோட்டிலும் அதிபர் டிரம்பின் கையொப்பம் விரைவில் இடம்பெறும் என்று அமெரிக்க கருவூலத் துறை அறிவித்துள்ளது.

## உலக நீர்மின் ஆற்றல் கண்ணோட்டம் 2026




- சர்வதேச நீர்மின் சங்கம் (IHA) வெளியிட்ட உலக நீர்மின் ஆற்றல் கண்ணோட்டம் 2026 அறிக்கையானது, இதுவரை இல்லாத அளவில் அதிகப்படியான பம்ப்/நீரேற்றம் செய்யப் பட்ட சேமிப்பு நீர்மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பம்ப்/நீரேற்றம் செய்யப்பட்ட சேமிப்புத் திறன் முதன்முறையாக 200 ஜிகாவாட்டைத் (GW) தாண்டிய நிலையில் இதன் மூலம் இதுவே உலகின் மிகப்பெரிய நீண்ட கால ஆற்றல் சேமிப்பு ஆதாரமாக உருவெடுத்து உள்ளது.
- பம்ப்/நீரேற்றம் செய்யப்பட்ட நீர்மின் சேமிப்பு (PHS) என்பது, வெவ்வேறு உயரங்களில் உள்ள இரண்டு நீர்த்தேக்கங்களுக்கு இடையே தண்ணீரை பம்ப்/நீரேற்றம் செய்வதன் மூலம் மின்சாரத்தை சேமிப்பதையும், தேவைப்படும்போது மின்சாரத்தை உற்பத்தி செய்ய அதை வெளியேற்றுவதையும் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியா 4 ஜிகாவாட்டிற்கும் அதிகமான நீர்மின் திறனைச் சேர்த்துள்ளதன் மூலம் ரஷ்யாவைப் பின்னுக்குத் தள்ளி, நிறுவப்பட்ட நீர்மின் திறனில் உலகின் 5-வது பெரிய நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இந்தியாவின் பம்ப்/நீரேற்றம் செய்யப்பட்ட சேமிப்பு திறன் 288 ஜிகாவாட்டாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் இது 2035-36 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் என்ற இலக்கைக் கொண்டுள்ள நிலையில் தற்போது, சுமார் 7.425 ஜிகாவாட் திறன் கொண்ட 10 திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன.

### மோங்லா துறைமுக மண்டலம் – வங்காள தேசம்

- முன்னதாக இந்தியப் பொருளாதார மண்டலத்திற்கு ஒதுக்கப்பட்ட திட்டத்தை மாற்றி, மோங்லா துறைமுகப் பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவதற்காக சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனத்துடன் வங்காள தேசம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் வங்காள தேசப் பொருளாதார மண்டல ஆணையத்திற்கும் (BEZA), சீன சிவில் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கும் (CCECC) இடையே கையெழுத்தானது.
- மோங்லா துறைமுகமானது, வங்கதேசத்தின் இரண்டாவது பெரிய மற்றும் இரண்டாவது பரபரப்பான கடல் துறைமுகமாகும் என்பதோடு இது கொல்கத்தாவில் இருந்து சுமார் 188 கி.மீ தொலைவிலும், சுந்தரவனப் பகுதிக்கு அருகிலும் அமைந்து உள்ளது.
- உள்கட்டமைப்பை மேம்படுத்துவது மற்றும் இணைப்பு, தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பம் (ICT), பசுமை ஆற்றல், பேரிடர் மேலாண்மை மற்றும் பிராந்திய வர்த்தக இணைப்புகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தியா-வங்காள தேச எல்லைக்கு அருகில் அமைந்துள்ளதால் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த தீஸ்தா நதி சீரமைப்புத் திட்டத்திற்கும் சீனா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

▶ MoU signed to develop **110-acre** economic zone in Mongla

▶ The site was previously designated for an Indian economic zone

▶ Indian-backed project delisted in **2025** after long inactivity

▶ Chinese investors have been keen on Mongla zone

## பொருளாதாரச் செய்திகள்

### சேவைகள் உற்பத்திக் குறியீடு

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சோதனை அடிப்படையில் சேவைகள் உற்பத்திக் குறியீட்டை (ISP) அறிமுகப்படுத்த உள்ளது.
- சேவைகள் உற்பத்திக் குறியீடு (ISP) என்பது தொழில்துறைகளுக்கான தொழில்துறை உற்பத்திக் குறியீட்டைப் (IIP) போலவே, இந்தியாவின் முறையான சேவைத்துறையின் உண்மையான உற்பத்தியை அளவிடும் ஒரு மாதாந்திர உயர்-அதிர்வெண் குறியீடு

ஆகும்.

- பொருளாதாரக் கண்காணிப்பு மற்றும் கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துவதற்காக, தேப்ஜானி கோஷ் தலைமையிலான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவால் (TAC) இது உருவாக்கப்பட்டது.
- இந்த ISP ஆனது 2024-25 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டுள்ளது. மேலும் மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) அடிப்படையிலான துறைசார் எடைகளுடன் கூடிய நிலையான எடை கொண்ட லாஸ்பியர்ஸ் தொகுதிக் குறியீட்டு முறையைப் பின்பற்றுகிறது.
- இது சரக்கு மற்றும் சேவை வரித் (GST) தரவு, நிர்வாகத் தரவு மற்றும் இணைக்கப்பட்ட சேவைகள் துறை நிறுவனங்களின் வருடாந்திர ஆய்வு (ASISSE) ஆகியவற்றுடன், அமைப்பு சாராத் துறை, பொது நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் பிற சந்தை அல்லாத சேவைகளைத் தவிர்த்து கணக்கிடப்படுகிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஒமேகா பிளாக் வானிலை அமைப்பு

- மேற்கு ஐரோப்பா முழுவதும் ஒரு தீவிரமான வெப்ப அலைக்கு ஒமேகா பிளாக் வானிலை அமைப்பு காரணமாக அமைந்துள்ளதுடன் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் சில பகுதிகளில் வெப்ப நிலை 40°C ஐத் தாண்டியுள்ளது.
- ஒமேகா பிளாக் என்பது இரண்டு குறைந்த அழுத்த அமைப்புகளுக்கு இடையில் சிக்கியுள்ள ஒரு உயர் அழுத்த அமைப்பாகும், இது கிரேக்க எழுத்தான ஒமேகாவின் (Ω) வடிவத்தை உருவாக்குகிறது.
- இது இயல்பான ஜெட் நீரோட்டத்தை சீர்குலைப்பதால் வானிலை அமைப்பானது 3-10 நாட்கள் அல்லது பல வாரங்களுக்கு ஒரே நிலையில் இருக்கும் படி செய்கிறது.

- ❖ இந்த உயர் அழுத்தப் பகுதி வெப்பமான, வறண்ட, மேகமற்ற நிலையைத் தருகிற அதே சமயம் அதைச் சுற்றியுள்ள குறைந்த அழுத்தப் பகுதிகள் குளிர்ந்த மற்றும் ஈரப் பதமான வானிலையைப் பெறுகின்றன.
- ❖ ஒமேகா பிளாக்குகளின் நிகழ்வுகளில் பருவநிலை மாற்றத்தின் விளைவு இன்னும் ஆய்வு நிலையில் உள்ள போதிலும், பருவநிலை மாற்றம் வெப்ப அலைகளின் தீவிரத்தையும் நிகழ்வெண்ணையும் அதிகரிக்கிறது என்பதை அறிவியலாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.
- ❖ அதிகரித்து வரும் உலகளாவிய வெப்பநிலையானது, ஒமேகா பிளாக் நிகழ்வுகளின் போது வெப்ப அலைகளை மிகவும் தீவிரமானதாகவும் நீண்ட காலம் நீடிக்கக் கூடியதாகவும் மாற்றுகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## ஹுருன் உலகளாவிய யூனிகார்ன் குறியீடு 2026

- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான ஹுருன் உலகளாவிய யூனிகார்ன் குறியீட்டில் 61 யூனிகார்ன் புத்தொழில் நிறுவனங்களுடன் இந்தியா 4-வது இடத்தைத் தக்கவைத்துள்ளது.
- ❖ இந்தக் குறியீடு, சமீபத்திய அறியப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், 1 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ₹8,300 கோடி) அல்லது அதற்கு மேல் மதிப்புள்ள தனியாருக்குச் சொந்தமான புத்தொழில் நிறுவனங்களை வரிசைப்படுத்துகிறது.
- ❖ 25 யூனிகார்ன்களுடன் பெங்களூரு இந்தியாவின் யூனிகார்ன் தலைநகரமாகத் தொடர்கிறது, அதைத் தொடர்ந்து மும்பை 13 யூனிகார்ன்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ அமெரிக்கா (806) முதலிடத்திலும், சீனா (381), இங்கிலாந்து (70) மற்றும் இந்தியா (61) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளதோடு, 222 யூனிகார்ன்களுடன் சான் பிரான்சிஸ்கோ உலகின் தலைசிறந்த யூனிகார்ன் நகரமாக உள்ளது.
- ❖ ஆந்த்ரோபிக் நிறுவனம் உலகின் மிகவும் மதிப்புமிக்க யூனிகார்ன் ஆக மாறியுள்ள அதே வேளையில் ஜெரோதா ($9 பில்லியன்) இந்தியாவின் அதிக மதிப்புள்ள யூனிகார்ன் ஆகத் தொடர்கிறது; ஜெப்டோ (Zepto) மற்றும் ரேஸர்பே ($6 பில்லியன்) ஆகியன அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.




## இதரச் செய்திகள்

### டைம்ஸ் உயர்கல்வி - தாக்கத் தரவரிசை 2026




- 2026 ஆம் ஆண்டிற்கான டைம்ஸ் உயர்கல்வி (THE) தாக்கத் தரவரிசையில், நிலையான வளர்ச்சி இலக்கு (SDG)-5: பாலின சமத்துவத்தில் மணிப்பால் உயர்கல்வி அகாடமி (MAHE) உலக அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- THE தாக்கத் தரவரிசையானது, கற்பித்தல், ஆராய்ச்சி, வெளிப்பாடு மற்றும் நிர்வாகத்தின் மூலம் ஐக்கிய நாடுகளின் (UN) 17 நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDGs) உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பின் அடிப்படையில் அவற்றை மதிப்பீடு செய்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்த உலகளாவிய தரவரிசையில் 101-200 என்ற பிரிவில் MAHE தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- SDG-3 (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு) இலக்கில் உலகளவில் 5-வது இடத்தையும், SDG-4-இல் (தரமான கல்வி) 23-வது இடத்தையும், SDG-17-இல் (இலக்குகளுக்கான கூட்டாண்மை) 93-வது இடத்தையும் MAHE பெற்றுள்ளது.
- நிலையான வளர்ச்சி, சமூகத் தாக்கம் மற்றும் நிறுவனப் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கான பல்கலைக்கழகங்களின் பங்களிப்பை இந்தத் தரவரிசை அங்கீகரிக்கிறது.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆